**நடுவர் நீதிமன்றம், பாப்பிரெட்டிபட்டி**
**முன்னிலை : திரு.ஐ.சம்பத்,B.A.,, MSW., LLB.,**
**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி**
**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11–ம் நாள் வியாழக்கிழமை**
**CC.No.279/2025**
**C.N.R.No.TNDP130014922025**

அரசு காவல் உதவி ஆய்வாளர்,
பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண்: 202/2025 ...குற்றமுறையீட்டாளர்

**/எதிரி/**

முருகன் த/பெ ராமன் ...எதிரி

**வழக்கு விபரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate, Pappireddipatti | | |
| 2. | Name of the Judge | Thiru.I.Sambath,B.A.,MSW,LLB., | | |
| 3. | Date of Judgment | 11.06.2026 | | |
| 4. | Case Number along with CNR Number | CC.No. 279/2025<br>C.N.R.No.TNDP130014922025 | | |
| 5. | Name of the parties of the case | Sub-Inspector of Police, Pappireddipatti<br>Cr.No. 202/2025 | | |
| | | Murugan S/o Raman | | |
| 6. | Date of Occurence | 16.09.2025 | | |
| 7. | Date of Complaint | 16.09.2025 | | |
| 8. | Date of arrest if any and remand | --- | | |
| 9. | Period of Remand of the Accused | --- | | |
| 10. | Date if release on bail | --- | | |
| 11. | Date of Final Report | 16.09.2025 | | |
| 12. | Date of Committal of the case to court of Sessions | -Nil- | | |
| 13. | Date of Questioning of the accused U/s.4(1)(C)TNP Act | 05.02.2026 | | |
| 14. | Date of Examination in Chief and cross examination of the witnesses | Witnesses | Chief | Cross |
| | | PW1 | 20.02.2026 | 20.02.2026 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW2<br>PW3 | 20.02.2026<br>20.05.2026 | 20.02.2026<br>20.05.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petitions U/S. 355 BNSS | -Nil- | | |
| 16. | Date of Examination of the Accused U/s.351 BNSS | 10.06.2026 | | |
| 17. | Details of the abscondence of an accused and his appearance / production as the case may be | -Nil- | | |
| 18. | Grant of Stay by Superior Courts and the results there of | -Nil- | | |
| 19. | Date of Commencement of Trial | 20.02.2026 | | |
| 20. | Date of Closure of Trial | 20.05.2026 | | |
| 21. | Date of Sentence of Order | 11.06.2026 | | |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | 11.06.2026 | | |
| 23. | If any delay give Explanation | -Nil- | | |

இவ்வழக்கானது 10.10.2025–ம் தேதி அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 11.06.2026–ம் தேதியன்று வந்தபோது குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை–1 செல்வி. V.சண்முகபிரியா,பி.ஏ.,எம்.எல்., முன்னிலையிலும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் C.குமார் E.விவேகானந்தன் V.அரவிந்த்திருஷ்ணா மற்றும் S.லிவ்யா ஆகியோர்களின் முன்னிலையில் வழக்கு ஆவணங்கள் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்த பின்னரும் இருதரப்பு வாதுரைகள் கேட்டறிந்த பின்னரும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. கடந்த 16.09.2025 ம் தேதி எதிரி முருகன் என்பவர் பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட செம்புவராயன் கோவில் தெருவில் தனது வீட்டின் பின்புறம் எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ பெறாமல் அரசு மதுபானமான

180 எம்.எல் அளவுள்ள எக்ஸ்பிரஸ் பிராந்தி –26 பாட்டில்களை ஒரு வெள்ளை நிற பிளாஸ்டிக் பையில் சில்லரையில் அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்த எதிரியின் செயலானது சட்டப்பிரிவு 4(1)(C) ன் படி தண்டிக்கதக்க குற்றம் என்று பாப்பிரெட்டிப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்நீதிமன்றம் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்து CC.No.279/2025 என 10.10.2025 –ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டவுடன் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் ஆஜரானவுடன் அரசு தரப்பு ஆவணங்கள் மற்றும் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு இலவசமாக BNSS பிரிவு 230 ன் கீழ் வழங்கப்பட்டு குற்றச்சாட்டுகள் வனைவதற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

3.எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டபின் வழக்கு ஆவணங்களை கவனத்துடன் பரீசிலனை செய்தபோது எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருந்தபடியால் எதிரி மீது தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் பிரிவு 4(1)(C) ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றங்களின் தன்மையை எதிரிக்கு படித்து விளக்கி கூறியபோது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என கோரியதால் வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க ஒத்தி வைக்கப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 மற்றும் அ.த.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. அரசு தரப்பு சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**

**(i) அ.சா.1 ஆனந்தன்(தலைமை காவலர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், கடந்த 16.09.2025 –ம் தேதி காலை 08.30 மணியளவில் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் சக்திவேல் அவர்களின் தலைமயில் தானும் தன்னுடன் 1529 முதல்

நிலை காவலர் முத்துபாண்டி ஆகியோருடன் காவல் உதவி ஆய்வாளருக்கு கிடைத்த மது விலக்கு குற்றம் சம்பந்தமாக பாப்பிரெட்டிப்பட்டி செம்புரயான் கோவில் தெரு அங்கே கண்காணித்து கொண்டிருந்தபோது அதே ஊரை சேர்ந்த எதிரி முருகன் த/பெ ராமன் என்பவரது வீட்டில் சந்தேகத்தின்பேரில் சோதனை செய்தும் அப்போது அவரது வீட்டின் பின்புறம் ஒரு வெள்ளை நிற பையில் 180 எம்.எல் அளவு கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி 26 பாட்டில்கள் இருந்தன என்றும், அரசு மதுபான பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்றும், எதிரியை காவல் உதவி ஆய்வாளர் அந்த இடத்திலேயே கைது செய்து விசாரித்து தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் தங்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180 எம்.எல் அளவு கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி மதுபான பாட்டில்கள் 26 ஐ கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் தானும் முதல் நிலை காவலர் முத்துபாண்டி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் கைப்பற்றபட்ட வழக்கு சொத்துக்களை காவல் உதவி ஆய்வாளர் சக்திவேல் உயர் அதிகாரியின் உத்தரவின்பேரில் அந்த இடத்திலேயே கொட்டி அழித்தார் என்றும், பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்து எதிரியை நிலைய பிணையில் விடுவித்தார் என்றும், சம்பவம் குறித்து காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) **அ.சா.2 முத்துப்பாண்டி (முதல் நிலை காவலர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், கடந்த 16.09.2025 ம் தேதி காலை 08.30 மணியளவில் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் சக்திவேல் அவர்களின் தலைமையில் தானும் தன்னுடன் தலைமை காவலர் ஆனந்தன் ஆகியோருடன் காவல் உதவி ஆய்வாளருக்கு

கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் சம்பந்தமாக பாப்பிரெட்டிப்பட்டி செம்புரயான் கோவில் தெரு அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது அதே ஊரை சேர்ந்த எதிரி முருகன் த/பெ ராமன் என்பவரது வீட்டில் சந்தேகத்தின்பேரில் சோதனை செய்தும் அப்போது அவரது வீட்டின் பின்புறம் ஒரு வெள்ளை நிற பையில் 180 எம்.எல் அளவு கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி 26 பாட்டில்கள் இருந்தன என்றும், அரசு மதுபான பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்றும், எதிரியை காவல் உதவி ஆய்வாளர் அந்த இடத்திலேயே கைது செய்து விசாரித்து தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் தங்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180 எம்.எல் அளவு கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி மதுபான பாட்டில்கள் 26 ஐ கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் தானும் தலைமை காவலர் ஆனந்தன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ. 1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் கைப்பற்றபட்ட வழக்கு சொத்துக்களை காவல் உதவி ஆய்வாளர் சக்திவேல் உயர் அதிகாரியின் உத்தரவின்பேரில் அந்த இடத்திலேயே கொட்டி அழித்தார் என்றும், பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்து எதிரியை நிலைய பிணையில் விடுவித்தார் என்றும், சம்பவம் குறித்து காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) **அ.சா.3 சக்திவேல் (காவல் உதவி ஆய்வாளர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது தொப்பூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 16.09.2025-ம் தேதி காலை 08.30 மணியளவில் தான் பாப்பிரெட்டிபட்டி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது தனது தலைமையில் தானும் தன்னுடன் முதல் நிலை காவலர்கள் ஆனந்தன் மற்றும் நடராஜ் ஆகியோருடன் தனக்கு கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் தடுப்பு சம்பந்தமாக

பாப்பிரெட்டிபட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட செம்புவராயன் கோவில் தெரு அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது அதே ஊரை சேர்ந்த எதிரி முருகன் அவரின் வீட்டின் பின்புறம் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்தபோது 180 ML அளவு கொண்ட Express Brandy 26 பாட்டில்கள் இருந்தன என்றும், எதிரி தங்களை கண்டவுடன் தப்பியோட முயன்றவரை போலிஸ் பார்டி உதவியுடன் பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்றும், எதிரியை தான் அந்த இடத்திலேயே கைது செய்தேன் என்றும், மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் தன்னுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180 ML அளவு கொண்ட Express Brandy 26 பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன் என்றும், கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கைப்பற்றப்பட்ட மது பாட்டில்களை சம்பவயிடத்திலேயே தனது உயர் அதிகாரியின் உத்தரவின்பேரில் அந்த இடத்திலேயே கொட்டி அழித்தேன் என்றும், பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து பாப்பிரெட்டிபட்டி காவல் நிலைய குற்ற 202/2025 சட்டபிரிவுகள் 4(1)(C) TNP ACT படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் எதிரியை நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், சாட்சிகள் 1 மற்றும் 2 ஐ தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து 16.09.2025 ம் தேதி எதிரி முருகன் என்பவருக்கு எதிராக 4(1)(C) TNP ACT படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், தனது விசாரணையில் சாட்சிகள் வாக்குமூலத்தில் உள்ளவாறு சொல்லியுள்ளார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான சாட்சிய விவரங்கள் குறித்து BNSS பிரிவு 351 (1)(b) –ன் படி வினவியபோது எதிரி பொய்சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி ஏதவாது சொல்லவேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்றும், அவர்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென்றும் கூறினார்கள்.

7. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் தங்களுடைய வாதத்தில் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றும், எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லையென்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து விடுதலை செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்?**

**9. தீர்வு**

(i) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் கடந்த 16.09.2025–ம் தேதி 08.30 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் சக்திவேல் அவர்களது தலைமையில் பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட செம்புவராயன் கோவில் அருகே மதுவிலக்கு ரோந்து பணி மேற்கொண்ட போது எதிரி முருகன் என்பவர் வீட்டின் பின்புறம் சந்தேகத்தின் பெயரில் சோதனை செய்தபோது 180 எம்.எல் அளவு கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி – 26 பாட்டில்களை ஒரு வெள்ளை நிற பையில் வைத்திருந்தார் என்றும், அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொது மக்களிடம் சில்லரையில் அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்றும், எதிரியை காவல் உதவி ஆய்வாளர் அந்தயிடத்திலேயே கைது செய்தார் என்றும், மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் பாட்டில்களை தாங்கள் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜரில் தாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், மேலும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றி எதிரியை நிலையம் கொண்டு வந்தார் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் தங்களது குறுக்கு விசாரணையில் சம்பவயிடத்திற்கு காவல் உதவி ஆய்வாளர் ஒரு வண்டியிலும் தாங்கள் மற்றோரு வண்டியில் சென்றோம் என்றும், ரோல்கால் காவல் நிலையத்தில் காலை 7.00 மணியளவில் நடைபெற்றது என்றும், சம்பவயிடத்தில் 3–ம் நபர் சாட்சிகள் யாரும் இல்லை என்றும், அனைத்து மதுபாட்டில்களும் மூடப்பட்டு

சீல்வைக்கப்பட்ட நிலையில்தான் இருந்தது என்றும், கைப்பற்றுதல் மகஜர் சம்பவயிடத்தில் வைத்து எழுதிக்கொண்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை சம்பவயிடத்தில் இருந்து சற்று தள்ளி காட்டுப்பகுதியில் கொட்டி அழிக்கப்பட்டது என்றும், பாட்டில் வைத்திருந்த பையை அங்கே அழித்துவிட்டோம் என்றும், கைப்பற்றப்பட்ட பொருளை அழிக்கும்போது வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்கவில்லை என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்கள்.

(ii) இவ்வழக்கில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சக்திவேல் என்பவர் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். அ.சா.3 இவ்வழக்கில் தான் செய்த புலன் விசாரணையை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் சம்பவத்தன்று ரோல்கால் 7 மணிக்கு நடைபெற்றது என்றும், மதுபாட்டில்கள் வைத்திருந்த சாக்கு பை மற்றும் பாட்டில்களை உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் அங்கேயே கொட்டி அழித்துவிட்டேன் என்றும், மேற்கண்ட பாட்டில்களை கொட்டி அழித்தபோது வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்கவில்லை என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

(iii) மேற்கண்ட அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களை கூர்ந்து கவனிக்கும் போது கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை பரிசோதனைக்காக அனுப்பி அதற்கான ஆய்வறிக்கை எதுவும் பெறவில்லை என்பதும், கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்பதும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை அழிப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து எழுத்து பூர்வமான உத்தரவு எதையும் பெறவில்லை என்பதும் மேற்கண்ட அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களின் மூலம் தெளிவாகிறது. எனவே எதிரி எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ பெறாமல் மதுபாட்டில்களை கள்ளதனமாக விற்பதற்காக வைத்திருந்ததாக சொல்லப்படும் குற்றச்சாட்டை பொறுத்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10.**இறுதியாக,** எதிரி முருகன் மீது சுமத்தப்பட்ட தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(C) ன் படியான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி

நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரியை தமிழ்நாடு மதுவிலக்க சட்டம் பிரிவு 4(1)(C) ன் படியான குற்றச்சாட்டுக்களிலிருந்து இந்நீதிமன்றம் BNSS பிரிவு 271 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

11. இந்த வழக்கில் சொத்துக்கள் ஏதும் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை. எனவே சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

12. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 11– ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

I SAMBATH

Digitally signed by I SAMBATH
Date: 2026.06.11 16:49:38 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பாப்பிரெட்டிப்பட்டி.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :**

அ.சா.1 – ஆனந்தன் (தலைமை காவலர்)

அ.சா.2 – முத்துப்பாண்டி (முதல் நிலை காவலர்)

அ.சா.3 – சக்திவேல் (காவல் உதவி ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :**

**<u>Judicial Form. 68</u>**

| Sl.No. | Description to the exhibits and its date | Date when the exhibit was filed in the case | How Marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1) | கைப்பற்றுதல் மகஜர் | 18.02.2026 | அ.த.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2) | முதல் தகவல் அறிக்கை | 20.06.2026 | அ.த.சா.ஆ.2 | அ.சா.3 | அசல் |

<u>**அரசு தரப்பு சான்று பொருள்**</u>:– இல்லை

<u>**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்**</u>:– இல்லை

I SAMBATH

Digitally signed by I SAMBATH
Date: 2026.06.11 16:49:49 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பாப்பிரெட்டிப்பட்டி.**

<u>**குறிப்பு**</u> :

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.